**அகலவத்த பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அகலவத்த பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அகலவத்த பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைப்புப் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் கலப்பு வைப்புக் கொடுப்பனவு ரூபா 354,098 ஆன போதிலும் ரூபா 654,098 தொகை கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் ரூபா 300,000 தொகை பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாகப் பெறப்பட்டிருந்த ரூபா 101,293 தொகையான ஆயுர்வேத மருந்தக இருப்பின் பெறுமதி அன்பளிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஆயுர்வேத களஞ்சிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) செலவினத் தலைப்பு 106 மற்றும் 205 இற்காக கணக்கீடு செய்யப்பட்டு நிலுவைச் செலவினமான முறையே ரூபா 187,400 தொகையும் ரூபா 50,051 தொகையும் நானாவித கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது நிதிக் கணக்கில் இருந்து தொழிற்சாலை நிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 1,099,809 தொகை, தொழிற்சாலை நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பொது நிதிக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கையில் அரசாங்க உதவிக் கடன்பட்டோர் கணக்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது 72 வேலைகளுக்காக ரூபா 11,553,125 கூட்டுத்தொகையான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை முன்னைய ஆண்டின் இறுதியிலான வேலைக் கடன்கொடுத்தோர் பட்டோலை அல்லது மீளாய்வாண்டிற்கான வேலைப் பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 124,977,728 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,062,678 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,274,366 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 2,389 | 2,172 | 430 |
| (ii) | வாடகை | 1,561 | 1,530 | 40 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 120 | 120 | -- |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,231,075 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 262,749 |

### 2.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை செயற்படாமை

2012 ஆம் ஆண்டில் மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 ஆக அங்கீகரிக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 மார்ச் மாதமளவில் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புஞ்சிகந்த வீதி II ஆம் கட்டத்தின் பிணைப்புக்கல் பதித்தல்

மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த புஞ்சிகந்த வீதி II ஆம் கட்டத்தின் பிணைப்புக்கல் இடப்படுவதற்காக 2011 செப்தெம்பர் 03 ஆம் திகதி திம்புர விவசாயிகள் அமைப்புடன் ரூபா 500,000 தொகையான உடன்படிக்கையிடப்பட்ட பணத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. வீதியின் நீளம் 103

மீற்றர்களும் அகலம் 2.45 மீற்றர்களுமாகக் காணப்பட்டன. பிணைப்புக்கல் பதிக்கப்பட்ட வீதியின் கற்களுக்கிடையே பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளதாகவும் வீதியின் மேற்பகுதியின் கற்களுக்கிடையே புற்கள் வளர்ந்திருந்தமையும் 2012 மார்ச் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கிரிகொல பட்டெவலகட வீதியில் பிணைப்புக்கல் பதித்தல்

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2012 இன் கீழ் கிரிகொல பட்டெவலகட வீதியில் 100 மீற்றர் நீளத்திற்கு 2.5 மீற்றர் அகலத்திற்கு கொங்கிரீட் பிணைப்புக்கற்கள் பதிக்கபட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்காக ரூபா 500,000 தொகை 2012 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் மேற்கொள்ளப்படுவதற்காக 2012 நவம்பர் 16 ஆம் திகதி சமுர்த்தி படையணியுடன் உடன்படிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் இறுதிக் கொடுப்பனவிற்காக அளவிடல் 2012 திசெம்பர் 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கு பதிக்கபட்ட பிணைப்புக் கற்களுக்கிடையே மண் நிரப்பப்படுவதற்காக ரூபா 15,500 தொகை பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பௌதீக மெய்மையாய்வுத் தினமாகிய 2013 மார்ச் 22 ஆம் திகதி அளவிலும் அவ் இடைவெளி மீள ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2012 ஆகஸ்ட் 08 ஆம் திகதி D/03/12 ஆம் இலக்க மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2012 கடிதத்தின் படி ரூபா 500,000 செயற்திட்டத்திற்காக 10100 பிணைப்புக்கல் இடப்படுவதற்கான அறிவுறுத்தல் இருக்கையில் மேற்குறித்த வீதியின் சதுர மீற்றருக்கிடப்பட்டிருந்த கற்களின் அளவு 37 என பௌதீக மெய்மையாய்வின் போது எடுக்கப்பட்ட அளவீட்டின் படி

அவதானிக்கப்பட்டதன் மூலம் வீதியில் இடப்பட்டிருந்த பிணைப்புக்கற்களின் அளவு ஏறக்குறைய 9250 ஆகக் காணப்பட்டது. இதன் படி 850 அளவு கற்கள் குறைவாக இடப்பட்டிருந்தன.

(ஈ) கிரிகொல பட்டேவலகட குடி நீர் தீர்மானத்திட்டம்

மேற்குறித்த செயற்திட்டத்திற்காக கிணறு மற்றும் நீர்த் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டு நீர்க்குழாய்கள் பொருத்தப்படுவதற்காக ரூபா 978,224 தொகையான மதிப்பீட்டிற்காக 2012 திசெம்பர் 03 ஆம் திகதி கிரிகொல சமுர்திப் படையணியுடன் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 24 ஆம் திகதி ரூபா 196,087 தொகையான முற்பணத் தொகையும் 2012 திசெம்பர் 29 ஆம் திகதி முதற்பகுதியும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த அமைப்பால் 2012 திசெம்பர் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலுக்காக சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களால் ரூபா 375,837 தொகையான கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 196,087 தொகையான முற்பணத் தொகையும் பட்டியல் பெறுமதியின் 10 % ஆன கையிலுள்ள பணமும் கழிக்கப்பட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்வுத் தினமாகிய 2013 மார்ச் 22 ஆம் திகதி வரை செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு 3 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் நீர்த் தாங்கியிலிருந்து வீதியின் இருமருங்கிலும் நீர்க்குழாய் இடப்பட்டிராமையால் நலனாளிகளுக்கு நீர் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு முடியாது போயிற்று.

## 2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.4.1 காணி விற்பனை வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் பிரதேச சபையில் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள ஓர் இடம் விற்பனை செய்யப்படுகையில் அல்லது ஏலவிற்பனையிடப்படுகையில் அவ் விற்பனைப் பெறுமதியில் 1% இற்கு சமனான வரி ஒன்று பிரதேச சபையால் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளின் போது ஏலவிற்பனையிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த 05 காணிகளில் மதிப்பிடப்பட்ட விற்பனைப் பெறுமதியின் அடிப்படையிலேயே வரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.4.2 காணிகள் உப பகிர்வு தொடர்பாக இணக்கச் சான்றிதழ் வழங்கப்படல்

இணங்கல் சான்றிதழ் பெறப்படாது காணித் துண்டு விற்பனை/ பயன்பாட்டிற்கு எடுக்கப்படல்/ கட்டிட நிர்மாணிப்பு 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டத்தின் 8 ஏ (1) ஆம் பிரிவின் பிரகாரம் அத்துமீறிய அபிவிருத்தியாக அமைவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த காணி 4 உப பகிர்வுகளுக்காக இணக்கச்சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 அன்பளிப்பு

2008 பெப்ரவரி 18 ஆம் திகதி அன்பளிப்பாக இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து பெறப்பட்டிருந்த 328 சாஸ்பான்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2013 மார்ச் 22 ஆம் திகதியும் சபைக் களஞ்சியத்தில் காணப்பட்டது. அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற சகல வகையிலான விடயங்களும் பதியப்படுவதற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 ஊழியர் பிணை

உள்ளூராட்சி ஆணையாளரின் 2004 யூலை 09 ஆம் திகதிய எல்ஜீ/05/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய 9 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 65,000 கூட்டுத்தொகையான பிணைப் பணம் அறவிடப்படுவதற்கு 2004 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையின் அறவீடு மாதாந்தம் ரூபா 100 வரையான குறைந்த தொகையானமையால் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்ட மொத்த பிணைத் தொகை ரூபா 38,100 ஆகக் காணப்பட்டது.

### 2.4.5 சொத்து மெய்மையாய்வு

(அ) 1988 ஏப்ரல் 17 ஆம் திகதிய 55/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் படி ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு முறை சபைக்குரிய காணி மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையிடமிருந்த 79 காணிகளில் மாத்திரம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப்பாகங்களும் மென்பொருட்களும் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.4.6 வாகனக் கட்டுப்பாடு

08 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வுத் தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்திற்காக எரிபொருள் வழங்கப்படுகையில் ஓட்ட அட்டவணைகளின் எரிபொருள் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இதன் படி அன்றாடம் தேவைப்படும் எரிபொருளின் அளவை விநியோகிப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வாகனங்களுக்காக ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 2.4.7 முற்பணக் கொடுப்பனவுகள்

1993 முதல் 2006 வரையான காலப்பகுதியின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 273,904 தொகையான முற்பண மீதி கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 உள்ளகக் கணக்காய்வு

1988 பிரதேச சபை விதிக் கோவையின் 5 விதியின் 7 ஆம் உப விதி மற்றும் V இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக போதிய உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்துவது தலைவரின் செயற்பாடான போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி 15 செலவின விடயங்களுக்காக ரூபா 1,920,100 கூட்டுத்தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக தலைவரின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்